MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907 (Year-113)

| 31-03-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் பங்குனி 17 | வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|
| புத்தகம் 56 | இதழ் 13 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |


## நம் ஆன்மீக சோம்பலால் இழக்கப்படும் வாய்ப்புகள்

**- திருத்தந்தை பிரான்சிஸ்**



மனம் திரும்பலுக்கு உரிய வாய்ப்பு, கால வரையறையின்றி, கணக்கு வழக்கின்றி கொடுக்கப்படுவதல்ல என்றும், அது எப்போது கிடைக்கின்றதோ அதை உடனே பற்றிக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும், இஞ்ஞாயிறு மூவேளை செப உரையின் போது அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இஞ்ஞாயிறு திருப்பலியில் வழங்கப்பட்ட நற்செய்தி வாசகத்தில் கூறப்பட்டுள்ள காய்க்காத அத்திமர உவமை குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனம் திரும்புவதற்கு நமக்கு கொடுக்கப்படும் வாய்ப்பை நாம் உதறித் தள்ளினால், அத்தகையதொரு வாய்ப்பு, மீண்டும் கிடைக்காமல் போகலாம் என்ற எச்சரிக்கையையும் முன்வைத்தார்.

கனிகளை எதிர்பார்த்து வந்தபோது, மரத்தில் ஒன்றுமில்லாததைக் கண்டு, அம்மரத்தை வெட்டிவிட தோட்ட உரிமையாளர் கட்டளையிட்டதையும், இன்னும் ஓராண்டு காத்திருந்து பார்ப்போம் என, அந்த மரத்திற்காக, தோட்டத் தொழிலாளர் பரிந்து பேசியதையும் குறித்து விளக்கமளித்த திருத்தந்தை, தோட்ட உரிமையாளர் இறைத்தந்தையாகவும், இயேசுவை நமக்காகப் பரிந்து பேசும் தோட்டத் தொழிலாளராகவும், மரத்தை, நம் அக்கறையற்ற நிலையாகவும் உருவகப்படுத்திக் காண்பித்து நாம் மனம் திரும்புவதற்கு, இறைவனின் இரக்கம் வழங்கும் கால அவகாசத்தைச் சுட்டிக்காட்டினார்.

மற்றவர்களைப் பற்றி கவலைப்படாமல், மற்றவர்களுக்கு எதையும் வழங்காமல், தன்னலத்திலேயே முடங்கிப்போய் எவ்வித பலனுமின்றி வாழும் மனிதர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, அவர்களின் வழிகளை மாற்ற முடியும் என இயேசு கூறுவதை, அத்திமரத்திற்கான அவரின் பரிந்துரையில் நாம் காண்கிறோம் என உரைத்தார். நாம் மனம் திரும்ப வேண்டிய தன் தேவை, இறைவனின் இரக்கம், அவரின் பொறுமை, நம் ஆன்மீக சோம்பலால் இழக்கப்படும் வாய்ப்புகள், இறை இரக்கத்தை தவறாக பயன்படுத்தாமல் இதய சுத்தத்துடன் பதிலளித்தல் போன்றவைகள் குறித்தும் தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை. இத்தவக்காலத்தில் நமக்கு விடப்படும் மனம் திரும்பல் குறித்த அழைப்புக்கு நல்முறையில் பதிலளித்து, இறை இரக்கத்தில் நம்பிக்கைக் கொண்டு மீண்டும் எழுந்து நடக்கவேண்டிய தேவையை உணர்ந்து பிறருடன் நல் உறவுகளை வளர்த்து செயல்பட வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார்.

## திருத்தந்தையின் மறைக்கல்வியுரை - 'உமது திருவுளம் நிறைவேறுக'

**- திருத்தந்தை பிரான்சிஸ்**

தூய பேதுரு பேராலய வளாகத்தில், திருப் பயணிகள், சுற்றுலாப் பயணிகள் என மக்கள் பெரு மெண்ணிக்கையில் நிரம்பியிருக்க, வானிலுள்ள எம் தந்தாய் என்ற இயேசு கற்பித்த செபம் குறித்த தன் தொடர் நிகழ்ச்சியில் இன்று 'உமது திருவுளம் நிறைவேறுக' என்ற மூன்றாவது வேண்டுதல் குறித்து தன் புதன் மறைக்கல்வி உரையைத் தொடர்ந்தார். முதலில், புனித பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் மடல் 2ம் பிரிவின் ஆரம்ப வார்த்தைகளான, அனைவருக்காகவும் மன்றாடுங்கள்; இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்து பேசுங்கள்; நன்றி செலுத்துங்கள். முதன்முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே. இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும், உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள். இதுவே நம் மீட்பராகிய கடவுளின் முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும். எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்' (திமொத்.2:1-4) என்பது வாசிக்கப்பட்டது. அன்பு சகோதரர் சகோதரிகளே, வானகத் தந்தாய் என்ற செபம் குறித்த நம் மறைக்கல்வி தொடரில் இன்று, 'உமது திருவுளம் நிறைவேறுக'

தொடர்ச்சி 2ம் பக்கம்..

## அருள்திரு தந்தை S. ஜேசுதாசன் இறைவனடி சேர்ந்தார்



தஞ்சாவூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்திரு தந்தை S. **ஜேசுதாசன்** (வயது 77) 23-03-2019 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் தஞ்சாவூரில் இறைவனடி சேர்ந்தார். கோயம்புத்தூர் நல்லாயன் குருத்துவக் கல்லூரிப் அதிபராகவும், கடலூர் புனித ஜான் குருத்துவ பயிற்சி இல்லத்தின் (St.John's Propaedeutic Seminary) அதிபராகவும் பணியாற்றி யவர். அவரது அடக்கச் சடங்கு திருப்பலி தஞ்சாவூர் தூய இருதய ஆண்டவர் பேராலயத்தில் 24-03-2019 மாலை 4.00 மணி அளவில் இடம் பெற்றது. தஞ்சை ஆயர் மேதகு M.தேவதாஸ் அம்புரோஸ் மற்றும் குடந்தை ஆயர் மேதகு F.அந்தோணிசாமி ஆகியோர் தலைமையில் சுமார் 200 அருட்தந்தையர்கள் இணைந்து நிறைவேற்றிய கூட்டுத் திருப்பலியில் ஏராளமான அருட்கன்னியர் களும் இறைமக்களும் பங்கேற்று, இறையடி சேர்ந்த அருள் தந்தைக்காக செபித்தனர். திருப்பலிக்குப் பின்னர், அருள்தந்தை S.ஜேசுதாசன் அவர்களின் திருவுடல் தஞ்சாவூர் குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தஞ்சை ஆயர் அவர்களுக்கும் அருட்தந்தையர்களுக்கும், அருள்தந்தை S. ஜேசுதாசன் அவர்களின் உடன்பிறந்தோர் மற்றும் உறவினர் களுக்கும், புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட **பேராயர் மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் சார்பாகவும், குருக்கள், இறைமக்கள் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செபிக்கிறோம். அருள்தந்தை S.ஜேசுதாசன் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. - *ஆசிரியர்.*

**உண்மையான நட்புறவு தான் நினைப்பதை என்றுமே மறைக்காது. - புனித ஜெரோம்**

ஆசிரியர் பேனா...

# மனித குல நலவாழ்வுக்கு இரக்கமே அடிப்படை

ஒவ்வொரு மனிதனும் பிறப்பு முதல் இறப்பு வரை மகிழ்ச்சியைத் தேடுகிறான். இந்த தேடுதல் பெரும்பகுதி புறத்தேடலாக அமைகிறது என்றாலும் அகத்தேடல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**இன்ப வாழ்வுக்கே இறைவன் மனிதர்களைப்** படைத்தார். முதல் மனிதனை இன்ப வனத்தில்தான் இருக்கச் செய்தார். சுயநலமும், கடவுளைப்போல ஆக வேண்டுமெனும் பேராசையும் அவனை விழத்தாட்டியது. மண்ணிலிருந்து படைக்கப்பட்ட மனிதன், இறைவன் அவனுக்கு அளித்த மாட்சியை இழந்து மீண்டும் மண்ணை நம்பி வாழ்ந்து மண்ணுக்கே செல்ல வேண்டிய நிர்பாக்கியவான் ஆனான். அன்றிலிருந்து இன்று வரை அவன் முழு மகிழ்ச்சியையோ, முழு சுதந்திரத்தையோ அனுபவித்தது இல்லை. குறையுள்ளவனாகவே மண்ணுக்குள் மறைந்து போகிறான். பிறப்பும் இறப்பும் மானிட வாழ்வின் இரு துருவங்கள்; ஆயினும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதே. "பிறந்த நாம் அனைவருமே இறந்துபோவோம்; ஆனால் இருக்கும் வரை இரக்கம் உள்ளவராயிருப்போம் என்றார் புனித அன்னை தெரெசா. இந்த இரக்கமே மானிட இருப்பின் நலவாழ்வுக்கான அடிப்படையாக உள்ளது. "50,70,90,100 - ஆண்டுகள் வாழ்ந்தாலும் நம்மை தொடர்ந்து வரும் நம் வழிமரபினருக்கு வளமான ஓர் இடத்தை விட்டுச் செல்லவே உழைக்க வேண்டும்" (பதினோராம் தலாய்லாமா).

**இயந்திரமாக இயங்கும் உலகில்**, நாம் பம்பரமாகச் சுழன்று போய்க் கொண்டிருக்கின்றோம். இத்தகைய சூழலில் நாம் தேடுவது மகிழ்வே, அமைதியே. இது எல்லாரிலும் பொதுவாக காணக்கூடிய ஒரு ஆசைதான். ஆனால் இன்றைய உலகில் நமது பணியும் இருப்பும், பயம், பீதி, பதட்டம், மன அழுத்தம், நிராசைகளினால் தாக்கமுறுகிறது. இதனால் நம்மைச் சுற்றியுள்ள சூழல் உலகும் இந்த அதிர்ச்சியில் அதிர்கிறது. உ.ம். தீய எண்ணம் நம்மைச் சுற்றி உள்ள விலங்குகளை யும், தாவரங்களையும் பாதிக்கிறது. இன்றைய உலகின் தொடர்பு சாதனங்களும், பொருளாதார கொள்கைகளும், உலக மயமாக்கலும், நுகர்வு கலாச்சாரமும் நமது மகிழ்வு மற்றும் இரக்க உணர்வுக்கு எதிர்சக்தியாகவும் எமனாகவும் மாறிப் போவது, சொல்லிப்புரிந்து கொள்ளக்கூடிய சோகம் அல்ல.

**நமது எண்ணமும், செயலும், நமது ஆளுமையும்** ஆளுமை அடிக்கூறுகளில் அடைந்து இருக்கிறது. தக்க தருணத்தில் அது கூட்டை உடைத்து வெளியேறும் போது சாதகமான செயலாக அல்லது பாதகமான செயலாக வெளிப்படுகிறது உண்மை. அண்மையில் மார்ச் 15 ஆம் தேதியன்று, நியூசிலாந்து தீவு நாட்டின் கிறைஸ்ட் சர்ச் நகரில் இரு மசூதிகளில் தொழுகைக்காக குழுமியிருந்த அப்பாவி மக்கள் ஐம்பது பேரை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்ற ப்ரன்டன் டாரன்ட் என்பவனை கூறலாம். இனவெறி, தீவிரவாத எண்ணத்தால் விழுங்கப்பட்டிருந்த அவன் ஆஸ்திரேலியாவைச் சார்ந்தவன் என்றாலும், நாட்டை விட்டு வெளியேறி வன்முறையும், படுகொலையும், இரத்தம் சிந்துதலும் இடம் பெறும் சிரியா மற்றும் இராக் நாடுகளுக்குப் பயணித்து வன்முறையைப் பார்த்து பழகிக் கொண்டான். பெருவாரியான அண்மைக் குடியேற்ற அகதிகள் வாழும் பகுதியை நியூசிலாந்தில் தேர்ந்தெடுத்து, இப்படுகொலைச் சம்பவத்தை அரங்கேற்றினான். இதனிலும் கொடுமை என்னவெனில், இப்படுகொலை நிகழ்வை ஊடகங்களில் பரவவிட்டவாறு (Live) பல்லாயிரக் கணக்கானோர் பார்க்கும் வகையில் அதனை அரங்கேற்றியுள்ளான். இந்த நிகழ்வுகளை உலக நாடுகளே கண்டனம் செய்துள்ளன. அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் பாராளுமன்றத்தைக் கூட்டி துப்பாக்கி கலாச்சாரத்தை ஒழிக்கும் நோக்கில், பல ரக துப்பாக்கி பயன்பாட்டினையும் பயன்பாட்டுச் சான்றினையும் ரத்து செய்துள்ளார். பாதிக்கப் பட்டவர்களுடன் தன் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி, அவர்களை அரவணைத்த நிகழ்வு அனைவரையும் நெகிழச் செய்துள்ளது; துபாய் நாட்டில் உலகிலேயே மிக உயர்ந்த பல அடுக்குமாடி கட்டிடத்தில் டிஜிட்டல் வடிவில் இதை விளம்பரப்படுத்தி நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**வெறுப்பு, அமைதியின்மை, விரக்தி,** இனவேற்றுமை போன்ற தீய எண்ணங்களை வளர்த்துக் கொண்ட அந்த தீவிரவாதி அவன் பெயரற்றுப் போனான் என்று நியூசிலாந்து அதிபர் முழங்கியது அனைவரையும் கவர்ந்தது. வன்முறை கையிலெடுப்பவன், அப்பாவிகளை கொன்று வீழ்த்துபவன் ஒருபோதும் தனது இலக்கை அடைய இயலாது. நட்பு, ஒற்றுமை, பகிர்வு, பாசம், அன்பு, அனைத்துக்கும் மேலாக இரக்கம் இருந்தால் மட்டுமே அமைதியையும் மகிழ்வையும் ஒருவன் கண்டடைய இயலும், சுவைக்க இயலும். பணம், பொருள், புகழ், பதவி, பட்டம் ஆகிய உலக காரணிகள் வரும், வந்த வேகத்தில் போய்விடும். அன்பு, ஈகை, தாராளமனம், மன்னிப்பு, சிறப்பாக இரக்கம் மனஅமைதியையும் உலக அமைதியையும் தரும். **இதய இரக்கமே வளமான நலவாழ்வுக்கும் மகிழ்வுக்கும் அமைதிக்கும் ஊற்றாக அமைந்துள்ளது.** எனவே தான், 8-12-2015 அமலோற்பவ அன்னை பெருவிழா முதல் 20-11-2016 - கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா வரையிலான ஓராண்டினை இரக்கத்தின் ஆண்டாக அறிக்கையிட்டு நம்மை வழிநடத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். இரக்கமே இன்றைய உலகுக்கு தேவையான அருமருந்து என்றும், தந்தை கடவுளின் இரக்கத்தின் முகம் இயேசு என்றும் நாம் உணரச் செய்தார்.

எனவே, பிறரை சுட்டிக்காட்டுவதை விட, நம்மையே உற்று நோக்குவோம். தனிமனித பண்பு வளங்கள் ஒரு வீட்டையும் நாட்டையும், சமூகத்தையும் அமைதிப் பாதையில் அழைத்துச் செல்லும். தனிமனிதனின் இரக்கச் செயல்கள், அவனைச் சுற்றியுள்ள இதயங்களை இணைத்து ஒன்றுபடுத்தும், உருவாக்கும் உயர்வடையச் செய்யும், மகிழ்ச்சியுறச் செய்யும். எழுதுவதாலும், வாசிப்பதாலும், பேசுவதாலும் விளையும் பலன்களைவிட, **இரக்கம் கலந்த செயல்களில் ஈடுபடுவது மனிதகுல நலவாழ்வுக்கு அது உயிரூட்டம் தரும்.** நமது வாழ்வும் இருப்பும் அடுத்தவரைச் சார்ந்திருப்பதால், நமது அயலாரையும் இயற்கைச் சூழலையும் அரவணைத்துச் செல்லும் இரக்கத்தை கற்று வாழ்வோம்.●

முதல் பக்கத் தொடர்ச்சி..

என்ற இச்செபத்தில் கூறப்படும் மூன்றாவது வேண்டு கோள் குறித்து நோக்குவோம்.

இறைவனின் திருவுளம் இயேசுவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அதாவது, காணாமல் போனதை தேடிக் கண்டுபிடித்து மீட்க வேண்டும் என்பதே அவரின் திருவுளம். இதன் மதிப்பறிந்து நாம் பாராட்டவில்லையெனில், இயேசு கற்பித்த செபத்தின் மூன்றாவது விண்ணப்பமாகிய உமது திருவுளம் நிறைவேறுக என்பதன் அர்த்தத்தை, சரியாகப் புரிந்துகொள்ளத் தவறி விடுவோம். மனித குலமனைத்தும் மீட்கப்பட வேண்டும் என்பதே இறைவனின் திருவுளம் என்பதை நாம் சந்தேகமின்றி உறுதியாகப் புரிந்து கொள்ளலாம். தங்கள் தந்தையின் இதயத்தையும், அவரின் அன்புநிறை திட்டத்தையும் அறிந்துள்ள குழந்தைகளாக, நாம் இச்செபத்தை செபிக்கிறோம். இந்த செபம், இயேசுவின் இதயத்திற்குள் எழுப்பிய அதே தூண்டு தலை நமக்குள்ளும் எழுப்புகிறது. குறிப்பாக, இறுதி இரவு உணவுக்குப்பின் ஒலிவ மலைக்குச் சென்ற இயேசு, "தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், ஆனாலும் என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்" (லூக். 22:42), என்று செபித்ததை நாம் காண்கிறோம். உலகின் தீச்செயல்களால், நொறுக்கிப் பிழியப்பட்ட போதிலும், இயேசு தன்னையே முழுமையாக, தந்தையின் திருவுளத்திற்குக் கையளித்தார். இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல, அதையும் தாண்டிய ஓர் உறுதிப்பாடு என்ற திடநம்பிக்கையுடன், இயேசுவைப்போல் நாமும் நம்மை இறைத்தந்தையின் கைகளில் ஒப்படைப்போம்.●




தவக்காலம் 5-ஆம் ஞாயிறு (07-03-2019)

எசா.43:16-21 பிலிப்.3:8-14 யோவான்.8:1-11

# “இனி பாவம் செய்யாதீர்”

*அருள்திரு.* **P. லூர்து ஜெயராஜ்**

*துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.*



அறிவியலிலும், நம் தனிப்பட்ட வாழ்விலும், சமுதாய வாழ்விலும் எவ்வளவோ முன்னேற்றங்களைப் பார்க்கிறோம். ஆனால் நமது ஆன்மீக வாழ்வு மட்டும் எப்போதும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இதற்கு முக்கியமான காரணம் நம்மிடம் பாவம் இல்லை என்ற எண்ணம், எல்லாரும்தான் தீமை செய்கிறார்கள் நானும் செய்தால் என்ன தவறு?, மேலும், பாவம் நான் செய்யவில்லை அவர்தான் செய்தார், இவர்தான் செய்தார் என்று பிறரை சுட்டிக்காட்டுகின்ற ஒரு தன்மை. பாவத்தில் விழுந்து அடிப்பட்டு எழுந்து அனுபவம் பெற்று கடைசி நேரத்தில் இறைவனிடம் சரணாகதி அடைவதுதான் நம்முடைய இயல்பாக இருக்கிறது. ஆனால் எனக்கு புதுவாழ்வு ஒவ்வொரு நாளும் தேவை என்று என்றைக்கு உணருகிறோமோ அன்றுதான் நமக்கு புது விடியல். இறைவனோடு என்றுமே இணைந்து வாழும் போதுதான் அந்த புதுவாழ்வு நம்மிலே மலரும். இன்று நாம் மனமாற்ற தவக்காலப் பயணத்தின் இறுதி வாரத்தில் அதாவது ஐந்தாவது வாரத்தில் இருக்கிறோம். இன்றைய ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு வழியாக இறைவன் நம்மைப் பார்த்து கேட்பது யாதெனில், மகனே! மகளே! நீ! என்னுடைய அருளையும் ஆசீரையும் பெற்று சோதனையில் விழுந்து விடாமல், உருமாற்றம் பெற்று, மனமாற்றம் அடைந்து, புதுப்படைப்பாக மாறி, ஊதாரி மைந்தனைப் போல என்னிடம் திரும்பி வர இந்தத் தவக்காலத்தினை தந்தேனே, என்ன செய்தாய்? மனம் மாறினாயா? பரவாயில்லை. நானும் உன்னைத் தீர்ப்பிடேன்; இனி பாவம் செய்யாதீர், என்னிடம் திரும்பி வா என்கிறார்.

***விபச்சாரத்தில் பிடிப்பட்டப் பெண்:*** விபச்சாரத்தில் ஈடுபட்டோர் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது மோசேயின் சட்டம் (லேவி.20:10; இச.22:13-14). இவ்வாறு பல்வேறு சட்டங்கள் இருந்த எருசலேமில் எவ்வாறு விபச்சாரம் நுழைந்தது என்ற கேள்விக்கு புனித யோவான் 7:1-2 ல் விடையளிக்கிறார். யூதர்களுடைய திருவிழாக் காலங்களில் பல்வேறு பகுதியில் வாழும் யூதர்களும், பிற இனத்து மக்களும் எருசலேமில் கூடும் வழக்கம் இருந்தது. ஆகவே இந்நாட்களில் வியாபாரம் பெரும் பங்கு வகித்தது. அதில் ஒரு வியாபாரமாகத் தான் விபச்சாரமும் நடைபெற்றது. இப்படிப்பட்ட சூழலில் பிடிபட்டப் பெண்ணைத் தான் பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவிடம் கூட்டிக் கொண்டு வருகிறார்கள்.

***அலகையின் சோதனை:*** இயேசுவின் செல்வாக்கு ஓங்குவதை உணர்ந்த பரிசேயரும், யூத குருக்களும் செசாருக்கு வரி கொடுப்பது முறையா? (மாற்.12:14); கணவன் தன் மனைவியை விலக்குவது சரியா? (மாற்கு.10:2) என்ற சிக்கலான கேள்விகளைக் கேட்டு அவரைச் சோதித்தனர். இன்றைய நற்செய்தி வாசகத்திலும், “போதகரே, விபச்சாரத்தில் பிடிப்பட்ட இப்பெண்ணை மோசேயின் சட்டப்படி கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். நீர் என்ன சொல்கிறீர்?” என்று இயேசுவை சோதித்தனர். இந்த சோதனை இயேசு பாலைவனத்தில் நாற்பது நாட்கள் இறைவனிடம் செபித்தபோது அலகை அவரை கல்லை அப்பமாக மாற்றும் என்று கேட்ட சோதனைபோல் தான் அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இயேசு, “ ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் எவரும் தன் உள்ளத்தில் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று” (மத்.5:27-28) என்று ஏற்கனவே விபச்சாரத்தை கடுமையாகக் கண்டித்துள்ளார். எனவே, இங்கு சட்டத் திற்கும் மனித நேயத்திற்கும் இடையே போராட்டம். மன்னித்தால் மோசேயின் சட்டத்தை இயேசு மீறுகிறார். ‘தண்டனைக் கொடுங்கள்’ என்று கூறினால், “நேர்மை யாளர்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்” என்று கூறினாரே இதெல்லாம் போலியான வாழ்க்கை என்று யேசுவின் மீது முத்திரை குத்துவார்கள். இவ்வாறு கைகளில் கற்களோடு இயேசுவின் இறுதி முடிவுக்காகக் காத்திருந்தது அந்தக் கூட்டம்.

***நானும் தீர்ப்பிடேன்:*** இயேசுவோ குனிந்து விரலால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார். கடவுள் தன்னுடைய விரலால் எழுதியதாக விவிலியத்தில் இரண்டு இடங்களில் தான் காண்கிறோம். ஒன்று, கடவுள் கற்பலகையிலே கட்டளைகளை எழுதி மோசேயிடம் கொடுத்தார் (விப.31:18). இரண்டாவது இன்றைய நற்செய்தி வாசகம் இயேசு குனிந்து விரலால் எழுதியது இதைச் சுட்டிக் காட்டுகிறது என்றால், விபச்சாரம் என்பது பெண்ணுக்கு மட்டும் தானா? என்று இயேசுவின் கோபமாகக் கூட இருக்கலாம். தங்களுடை பாவங்களையும் குற்றங்களையும் அறிக்கையிடுவதற்குப் பதிலாக, பிறரது குற்றங்களையும் குறைகளையும் மட்டுமே பேசி தங்களை நல்லவர்களாகக் காட்டிக் கொண்ட அவர்களிடம், “உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் அவள் மேல் கல் எறியட்டும்” என்று மெல்ல சொன்னது அவர்களுக்கு இடியாய் இருந்தது. நாம் நம்முடைய ஒரு விரலை நீட்டி ‘நீ சரியில்லை’, ‘நீங்கள் சரியில்லை’, ‘அவர்கள் சரியில்லை’ என்று கூறும்போது மற்ற நான்கு விரல்களும் நம்மை பார்த்து ‘நீ சரியில்லை’ என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் போலும். பின்னர் அவர்கள் கரங்களிலிருந்து கற்கள் ஒவ்வொன்றாக கீழே விழுகிறது. ஒருவர் பின் ஒருவராக செல்கின்றனர். இயேசு கனிந்த முகத்தோடு அப்பெண்ணைப் பார்த்து, “நானும் தீர்ப்பிடவில்லை; இனி பாவம் செய்யாதே” என்றார். அப்பெண்ணை தண்டிக்காமல் விட்டதால் இயேசு பாவத்திற்கு துணை போகிறார் என்று அர்த்தமில்லை. இயேசு பாவத்தைத்தான் வெறுக்கிறார், பாவிகளை அல்ல. எனவே பிறரைப் பார்த்து நீ பாவி என்று தீர்ப்பிடுவதற்கு முன் நான் பாவி என்று ஏற்று சுய ஆய்வு செய்ய ஆண்டவர் இயேசு இன்று நம்மை அழைக்கிறார்.

***இனி பாவம் செய்யாதீர்:*** விபச்சாரம் என்றவுடனே நம் எல்லோருடைய எண்ணங்களுக்கு வருவது ஆண்-பெண் தவறான உறவு. ஆனால் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் இனம் நம் கடவுளை மறந்து வேற்றுக் கடவுளை வழிபட்டபோது அது விபச்சாரம் செய்ததாகச் சாடுகிறார் இறைவன் (ஓசே.3:). எனவே நாம் பாவம் செய்து கடவுளின் அன்பை விட்டு பிரிந்து செல்வது விபச்சாரத்திற்கு சமம் என்றுதான் பொருள். நாம் அனைவரும் பாவிகள். நம்மிடம் பாவமில்லை என்போமாகில் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம் (1யோவா.1:8). மேலும் நாம் பிறர் மீது குற்றம் காணுமுன் நம்மையே சோதித்தறிய வேண்டும். “தவறுவது மனித இயல்பு, ஆனால் திருந்தி வாழ்வதுதான் மனித மாண்பு.” பிறரது குற்றங்களை பெரிதுப் படுத்தி நம்மை நல்லவர்களாக காட்டிக் கொண்டிருப்பதைவிட, நல்ல ஒரு ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று நம்முடைய பாவங் களையும், குற்றங்களையும் அறிக்கையிடுவோம். கடவுள் நம் பாவங்களை மன்னித்து மீட்பின் மகிழ்ச்சியால் நிரப்புவார். எனவே கடவுள் நம்மைப் பார்த்து, இந்த நொடிப் பொழுது வரை நீ பாவியாய் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பரவாயில்லை. மகனே! மகளே! ‘இனிமேல் பாவம் செய்யாதீர்’ என்கிறார். ●



## இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (19)

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

82. **“உங்கள் பணியாளர் உழுதுவிட்டோ மந்தையை மேய்த்து விட்டோ வயல்வெளியில் இருந்து வரும்போது அவரிடம், “நீர் உடனே வந்து உணவருந்த அமரும்” என்று உங்களில் எவராவது சொல் வாரா? மாறாக, எனக்கு உணவு ஏற்பாடு செய்யும், நான் உண்டு குடிக்கும் வரை எனக்குப் பணிவிடை செய்யும், அதன்பிறகு நீர் உண்டு குடிக்கலாம்’ என்று சொல்வாரல்லவா? தாம் பணித்ததைச் செய்த தற்காக அவர் தம் பணியாளருக்கு நன்றி கூறுவாரா?** (லூாக்.17:7-9)

இரக்கமுள்ள இயேசுவா இப்படி ஓர் ஊழியனிடமிருந்து எதிர்பாபர்க்கிறார் என்று கேட்கத் தோன்றுகிறது. “சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று சொன்னவரா உழைத்துக் களைத்து வந்தவனிடம் மேலும் உழைப்பைக் கேட்கிறார்?

இயேசு வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் இப்படி உழைப்பை வாங்கியிருந்ததை அவர் பார்த்திருந்தாலும் அதைக் கண்டனம் செய்யவில்லையே!

உழுதல் இங்கு ஆன்மீகப்பணி. அதாவது மனங்களை இறைவார்த்தையைப் பெற்றுக்கொள்ள தயாரிக்கும் சீடர்களின் பணி. ஆடு மேய்த்தலும் ஆன்மாக்களைக் கவனிக்கும் ஆயர் பணி. அவற்றைச் செய்பவர்களின் வேலை உடனே முடிந்து விடுவதில்லை. நிலத்தை உழுதவன் வேலையும் ஆடுகளை மேய்க்கும் ஆயனின் வேலையும் அவற்றோடு முடிந்து விடுவதில்லை. தன்னை அனுப்பியவரின் காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்க வேண்டும்.

ஆன்மீகப்பணி செய்ததற்காக கடவுள் நமக்கு நன்றி சொல்ல வேண்டுமா? எனவே நன்றி சொல்லுவாரா என்று கேட்கிறார்.

83. **இயேசு, அவரைப் பார்த்து, “பத்துப் பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே?** (லூாக் 17:17)

இயேசு தாம் செய்த எந்த நன்மைக்கும் கைம்மாறு எதிர்பார்த்தவரல்லர். ஆனால் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். ஏனென்றால் நன்றியறிந்தி ருத்தல் மனித மாண்பாகும். மனிதனின் மாண்பை உயர்த்த வந்தவர் நன்றியை எதிர்பார்ப்பது முறைதானே! பிறநலச் சேவை செய்பவர்கள் நன்றியறிதலை எதிர்பார்க்காமலே உதவி செய்தால் அவர்களைப் பிச்சைக் காரர்களாக்குகின்றனர் எனலாம் அல்லவா!

ஒரு மறைப்பணி குரு மிகவும் பின்தங்கிய மடகஸ்கார் நாட்டில் பணிபுரிந்தார். அங்கு மக்களுக்குப் போக்குவரத்து வசதியே இல்லை. அவர் தன்னுடைய ஜீப்பை எடுத்துக் கொண்டு நகரத்துக்குப் புறப்பட்டால் மக்கள் உடனே ஓடிவந்து ஏறிக்கொள்வார்கள். அவரும் அவர்களை அன்புடன் ஏற்றிச் செல்வார். அப்படி ஒரு நாள் போகும்போது வழியில் அந்த ஜீப்பின் டயர் பஞ்சர் ஆகிவிட்டது. எல்லோரும் கீழே இறங்கினர். அவர் தன்னந்தனியாக டையரை மாற்றிக் கொண்டிருக்கும்போது ஒருவர் கூட அவருக்கு உதவி செய்யவில்லை. எனவே வேலை முடிந்ததும் யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அவர்கள் நல்ல பாடம் கற்றிருப்பார்கள்.

நமது திருத்தந்தை ப்ரான்சிஸ் “நன்றி” என்று சொல்ல வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்.

84. **தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆயினும் மானிட மகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரா? என்றார்.** (லூாக்.18:7-8)

இங்கு இயேசுவின் வித்தியாசமான ஒரு கருத்தைப் பார்க்கிறோம். அதாவது செபத்திலேயே தாம் தேர்ந்து கொண்டவர்களின் வேண்டுதலுக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கிறார். இரு கேள்விகளால் அதை உறுதிப்படுத்து கிறார். ஒன்று நீதி வழங்குவார் என்பது மற்றொன்று காலந் தாழ்த்தாமல் நீதி வழங்குவார் என்பது. ஏன் மற்றவர்களின் வேண்டுதலைவிட தாம் தேர்ந்துகொண்டவர்களின் வேண்டுதலுக்கு அவ்வளவு முன்னுரிமை தரவேண்டும்?

ஓர் அரசர் தன் ஆட்சிக்குட்பட்ட சந்நியாச மடங்களுக்கு நிறைய மானியங்களை வழங்கி வந்தார். அரசருடைய மந்திரி “ஏன் அவர்களுக்கு இவ்வளவு தானம் செய்கிறீர்” என்று கேட்டார். அதற்கு அரசர் “அந்த துறவிகள் நமக்காக இறைவனிடம் வேண்டுகிறார்கள், அதனால்தான்” என்றார். மந்திரி “ஏன் நாம் வேண்டினால் கடவுள் நம் வேண்டுதலைக் கேட்கமாட்டாரா?” என்றார். அதற்கு அரசர் “சரி, நான் உனக்கு அதிகாரம் வழங்குகிறேன். நீர் என் அரியணையில் அமர்ந்து ஏதாவது கட்டளையிடும்” என்றார். மந்திரியும் அரியணையில் அமர்ந்து “சேவகா, இந்த அரசரைக் கைது செய்” என்றார். சேவகன் நின்ற இடத்தைவிட்டு அசையவில்லை. மீண்டும் அரசர் அரியணையில் அமர்ந்து “சேவகா, இந்த மந்திரியைக் கைது செய்” என்றார். அவன் உடனே அவரைக் கைது செய்தான். அரசர் “பார்த்தீரா உம் வார்த்தைக்கும் என் வார்த்தைக்கும் உள்ள வேறுபாட்டை?” என்றார். தாம் தேர்ந்துகொண்டவர்களின் வேண்டுதலுக்கும் மற்றவர்களின் வேண்டுதலுக்கு உள்ள வேறுபாடும் இப்படிப்பட்டதுதானோ?

இயேசு அடுத்த கேள்வி “**மானிட மகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரா? அ**ன்று கடவுளுக்கும் பணத்துக்கும் போட்டி, அது அப்படியேதான் இன்றும் இருக்கிறது. மேலும் இன்று கடவுளுக்கும் அறிவியலுக்கும் போட்டி. தற்கால மனிதர் கடவுளைவிட அறிவியலை நம்புகிறார்கள். புற்றுநோய் கண்ட ஒரு கத்தோலிக்கப் பெண் என்னிடம் கூறினாள்: “நான் கடவுளைவிட அறிவியலை நம்புகிறேன்”.

இயேசுவின் கேள்விக்கு யாரும் பதில் அளிக்கவில்லை. நாம்தான் பதிலளிக்க வேண்டும்.

85. **“மோசே உங்களுக்குத் திருச்சட்டத்தைக் கொடுத்தார் அல்லவா? எனினும் உங்களுள் யாரும் அச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்லை. இப்போது என்னையும் கொல்லப் பார்க்கிறீர்களே!” என்றார்.** (யோவான் 7:19)

இது ஒரு கேள்வி அல்ல, ஆச்சரியம். ஆச்சரியமே கேள்வியாக வந்துள்ளது. இயேசுவைக் கொலை செய்யத் தேடியதால் மோசேயுடைய சட்டத்துக்குக் கீழ்ப்படியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். - தொடரும்

---

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி. மரி தெரேஸ் (எ) தங்கம்

பிறப்பு: 11-12-1927
இறப்பு: 31-03-2015

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

31-3-2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் நெல்லித் தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் நடைபெறும் மரித்தோர் பாடல் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபித்த அனைவருக்கும் மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
மகன்கள்: J. ஆரோக்கியராஜ்
J. அன்துவான்ராஜ் - பிரான்ஸ்
மகள்: J. அல்போன்ஸ் மரி
மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.



# இந்தியக் கிறிஸ்தவ வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

பெயர் வடிவம் இல்லாத பரம் பொருளான இறைவன் வாழ்வின் ஊற்றாக, வாழ்வை வழங்குபவராக, வாழ்வாக விளங்குகின்றார். தனது வாழ்வை இந்தியாவில் எவ்வாறு பகிர்ந்துகொள்கின்றார், எவ்வாறு இயேசு கிறிஸ்து வழியாகப் பகிர்ந்து கொள்கிறார் என்று இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்களின் சொந்த பூர்வீக பண்பாட்டில் உணர்வதே மேலானது. அன்று மேலை நாட்டு முறையில் பகிர்ந்தனர் ஆனால் இன்று அவ்வாறு இல்லாமல் மண் வாசனைக்கு ஏற்ப அனைத்திலும் உயிர்த்த ஆண்டவரின் ஆவிக்குப் பெயர் வடிவம் தருவதே முறையாகும். சொந்த நாட்டில் நாம் அந்நியர்களாய் தொடர்ந்து இருப்பது முறையல்ல. தாயகப்படுத்த, தலத்திருஅவையாக கடவுள் திருச்சபை வழியாக அழைப்பு கொடுத்து அரை நூற்றாண்டு கடந்துவிட்டது, எனவே திருஆட்சியாளர்கள், துறவிகள், கிறிஸ்தவ விசுவாசிகள் விழிப்புணர்வு பெற்று வாழ்வதும், விளங்குவதும் எவ்வளவோ மேலானது. அங்கும் இங்கும் இலேசாக இடம் பெற்று வரும் மறுமலர்ச்சி நமது நாடு முழுவதும் இடம்பெற விழித்தெழுவோம்.

**அருள் வாழ்வு:** ஆவியில் இடம் பெறும் இயக்கமாகும். முழுமையான சுதந்திரத்தை நோக்கி பயணிக்கும் ஆவியால் இயக்கப்படும் மக்களாக இருப்பதே முக்கியம். ஆவியால் இயங்கினால் உடலைச் சார்ந்த எதுவும் நம்மை அடிமை களாக வாழ விடாது. ஆவியின் மையம் இல்லாததால், இன்னமும் சாதி, இனம், மொழி, ரீதி போன்ற காரியங் களுக்கு உடன்பட்டு பிளவுபட்டு எதிர்ச்சான்றாக இருந்து வருகிறோம். ஆவிதான் கிறிஸ்தவர்களை ஒன்றிணைக்கும். ஆன்மா, உயிர்த்த ஆண்டவர், இறை ஆவிதான் எங்கும் எதிலும் எப்போதும் முக்கியமாகும்.

**கிறிஸ்தவ வாழ்வு:** தனியாக, குழுவாக நம்பிக்கையில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதாகும். பழைய, புதிய ஏற்பாடு, ஆரோக்கியமான மரபு இவைகளில் ஊன்றி சான்று பகர்வது நமது வாழ்வாகும். ஒருவரின் சுதந்திரத்தை மதித்து, பேணி வளர்த்தெடுத்து கிறிஸ்துவில் கிறிஸ்துவோடு கிறிஸ்து வுக்காக வாழ்வது அருள்மிகு கிறிஸ்தவ வாழ்வாகும். இயேசுவை அன்றாட வாழ்வில் தேர்ந்து தெளிவு பெற்று தனி நபரும், குழுவும் பயணிப்பது மிகவும் பயன்மிக்கதாகும்.

**இந்தியக் கிறிஸ்தவ வாழ்வு:** நமது நாடு பழம்பெரும் நாடு. பல்வேறு பண்பாடுகள், மொழிகள், இனங்கள் இணைந்து வாழும் இந்தியாவாகும். சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு இவைகளின் வழியாக இறைவனுடைய திருவுளத் தையும், திட்டத்தையும் கண்டுணர்வது உகந்தது. இந்திய மரபில் இடம் பெற்று வரும் வழிமுறைகளை கிறிஸ்துவின் பார்வையில் கண்டு இந்தியக் கிறிஸ்தவர்களாக இருபெரும் மரபுகளையும் இணைத்து வாழ்வதே உகந்தது. இத்தகைய ஓர் அணுகுமுறையை இன்னமும் நாம் மேற்கொள்ளாது, மேலை நாட்டு முறையில் இருப்பது நம்மைத் தொடர்ந்து அந்நியப்படுத்தும். பழக்கப்பட்ட பண்பாட்டில் இருப்பதைவிட, நமக்குரியப் பண்பாட்டில் விளங்குவதே திருச்சபையின் அதிகாரப்பூர்வமான போதனையாகும். நாம் எந்த நிலையில் வாழ்கிறோம் வழிபடுகிறோம் என்று எல்லாரும் எண்ணுவது மிகவும் முக்கியமாகும்.

**ஏப்ரல் 25.1969 – ஏப்ரல் 25-2019:** ஐம்பது ஆண்டுகளைக் கடந்த பின்பு இன்னமும் இலத்தீன், சீரோ ரீதியில் வழிபாடு இடம் பெற்று வருகிறது. இந்திய முறைப்படி வழிபாடு இடம் பெறாதது நமது பொறுப்பாகும். நாட்டிற்கும் வீட்டிற்கும் ஏற்புடையவர்களாய் வாழாமல் இருப்பது உகந்ததல்ல. திருச்சபை அனுமதித்த ஆரம்ப 12 கூறுகளையாவது நாம் ஏன் கடைபிடிக்கக் கூடாது என்பது நியாயமான கேள்வியாகும். இந்திய மக்களின் எளிமை வாழ்வு நமது வாழ்வாக வேண்டும். எளிமையில் தான் இறைவனை நாம் தரிசிக்க இயலும். மிதியடி இல்லாமல் ஆலயத்தில் இருப்பது, கரம் குவித்து வணங்குவது, ஆரத்தி, திலகம் பயன் படுத்துவது, தரையில் அமர்வது, பஜனைப் பாடுவது, ஆரத்தி எடுப்பது, பஞ்சாங்கப் பிரணம் செய்வது; கரம் குவித்து சமாதானத்தைப் பகிர்ந்து கொள்வது, எண்ணெய் விளக்கைப் பயன்படுத்துவது, கரம் விரித்து கடவுள் வார்த்தையைக் கேட்பது, காணிக்கை மலர்கள் எட்டு பயன்படுத்துவது, இந்திய அடையாளங்கள், நடை, உடை, பாவனைகளைப் பயன்படுத்துவது, பூசை உடுப்புகளை எளிமையாக்குவது, தாம்பாளத்தைப் பயன்படுத்துவது, விசுவாசிகளின் மன்றாட்டுக்களில் பங்கெடுப்பது போன்ற துவக்கமுயற்சிகள் இடம் பெற்றால், இன்றைய காலக் கட்டத்தில் தாயகப்படுத்துதல், நமது மக்களின் விசுவாச உணர்வுகளை சரியான பாதையில் வளர்த்திருக்கும். விழித்தெழுந்து மக்களை நமது மக்களாகக் கட்டி எழுப்புவோம்.

**வாழ்வும் வழிபாடும்:** நவீனம் என்பது வேறு பண்பாடு என்பது வேறு, நற்செய்தி என்பதும் வேறு, இருப்பினும் இவை களுக்குள் இருக்கும் தொடர்பையும் உறவையும் திருச்சபை போதிப்பதற்கு ஏற்ப ஒருங்கிணைத்து செல்வது தேவைப் படுகிறது. இயேசு இந்தியாவில் பிறந்திருந்தால் எப்படி செயல்பட்டிருப்பார் என்பதுதான் நமது அளவுகோல். இயேசு எதையும் அழிப்பதற்கு அனுப்பப்படவில்லை, அனைத்தை யும் நிறைவேற்றவே வந்தார். ஒரே கடவுள்தான் என்றும் செயல்பட்டுக் கொண்டு வருகிறார். அதையே இயேசு நமக்கு வெளிப்படுத்தி நிறைவு செய்கிறார். இந்தியர்கள் இந்தியர்களைப் போல் வாழவும், அந்த வாழ்வை கிறிஸ்தவ வாழ்வாக அமைத்துக் கொள்ளவும், இவ்வாறு இந்தியக் கிறிஸ்தவ வாழ்வையும் வழிபாட்டினையும் மேற்கொள்வது நமக்கும் நமது நாட்டிற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும் நமது சுய நலம் என்பது பல்வேறு போர்வைகளில் தனித்தன்மையைத்தான் வெளிப்படுத்த முயல்கின்றதே தவிர பொதுத் தன்மைக்கு வர இயல வில்லை. பொதுத்தன்மையை கிறிஸ்துவின் உயிர்த்த ஆவியில்தான் நாம் பெற முடியும். உயிர்த்த ஆண்டவரின் அனுபவம்தான் முக்கியமே தவிர பல்வேறு விதமான இறையியல் சிந்தனைகள் பெரிதல்ல. இறையியலைவிட இறைவனே மேலானவர் முதன்மையானவர் என்பதை நமது வாழ்வில் வழிபாட்டில் கடைபிடிப்போம்.

“எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக” என்பதே இயேசுவின் இறுதி வேண்டுதல். இன்னமும் கிறிஸ்தவர்கள் மத்தியில் நமது நாட்டிலும் நாம் வாழும் உலகிலும் எண்பிக்க முடியவில்லை என்றால் நமது நம்பிக்கையின் ஆழம் எவ்வளவு என்று ஆய்வுக்குட்படுத்துதல் தேவைப் படுகிறது. இந்நிலையில் அவர்கள் இவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்பதைவிட, இயேசு கிறிஸ்து என்ன சொல்லுகின்றார் என்று அவருக்குச் செவிமடுப்பது மேலானது. தான் தனது என்பதை இழப்பதில் தான்நாம் நமது என்பதையும், இதையும் இழப்பதில்தான் உயிர்த்த ஆண்டவரின் தரிசனத்தை நாம் பெற வேண்டும். அவரின் தரிசன அனுபவத்தில் அனைத்தும் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. அனுபவத்திற்கு ஆளாகி, உயிர்த்த ஆண்டவரின் மெய்மையாகும் போது இறையரசு இதயத் திலும் இல்லத்திலும் சுடர்விடும் என்பதில் நம்பிக்கைக் கொண்டு நாளும் பயணிப்போம், வேண்டுவோம், சரண் அடைவோம்.●

120 இளம் உள்ளங்களுக்கு

## பாவிக்கு பொறுத்தல் உண்டு

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**கொடுங்கோல் மிஷேல்:** 1871ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை பாரிஸ் ஊராட்சி மன்றத்தை ஆட்சி செய்த இழி பெயர் பெற்ற தலைவர்களிலேயே மிக மோசமான வளாக விளங்கிய பெண்தான் லூயி மிஷேல் (Louis Mitchell). மிகக் கொடியனவாக பட்டியலிடப்பட்ட பல குற்றங்கள் அவளா லேயே நிகழ்ந்தன. பல வீடுகளை தீக்கிரையாக்கி பலரை கொன்று குவித்தாள். தேவாலயங்களை தரைமட்டமாக்கி யதுடன் ஒரு டஜனுக்கும் அதிகமான குருக்களை கொன்று குவித்தாள். மதக் கோட்பாட்டிற்கு எதிரான வெறித்தனத்திற்கு, இந்த நாகரிக உலகில் அவளே மிக மோசமான எடுத்துக்காட்டு.

**தண்டனையும், தவிப்பும்:** பாரிஸ் ஊராட்சி மன்ற ஆட்சி முடிவுக்கு வந்த போது, அவள் பிடிபட்டு சில ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டாள். சிறையிலிருந்து வெளி வந்தபோது அவள் கையில் காசில்லை, நோய்வாய் பட்டிருந்தாள், நண்பர்களும் யாருமில்லை,போக்கிடம் ஏதுமில்லாமல் தவித்தாள். இந்த சூழ்நிலையில், எந்த மத தேவாலயங்களை அழித்து பல குருக்களை கொன்றாளோ, அங்கேயே அடைக்கலம் தேடிச் சென்றாள். ஒரு கன்னியர் மடத்தில் அவளுக்கு ஒரு வேலை கொடுத்து அதன் மூலம் உணவு, உடை, உறைவிடம் கிடைக்க செய்தார்கள்.

**மனமாற்றம்:** ஆச்சரியத்திற்குரிய விதமாக அவள் கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தில் பற்றுகொண்டு தினமும் நற்கருணை உட்கொள்பவரானார். ஆனாலும் அவள் உடல் நிலை தொடர்ந்து மோசமடைந்தது. அவள் செய்துவந்த சிறிய வேலையையும் இப்போது அவளால் செய்ய முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருந்த அந்த பெண்ணிடம் ஒரு கன்னியாஸ்திரி, “இப்போது உன் சாவை எதிர்கொள்ள நீ தயாராக இரு. இரக்கமுள்ள தேவனிடம் செபித்து மன்றாடி அவரது மன்னிப்பை கேள்” என்றார். அதற்கு லூயி மிஷேல் தன் பலவீனமாக குரலில், “ஆம்... சகோதரி.... என் கடந்த காலம் மிக மோசமானது. ஆனால் எப்போதி லிருந்து என் பாவத்தின் கனத்தை என் இயேசுவின் இரக்கம் குறைக்கவல்லதாய் இருந்திருக்கும்.” இத்துடன் அவள் மூச்சு அடங்கியது.

**சிந்தனை:** மனிதனால் மன்னிக்கக் கூடாததாக சில பாவங் கள் இருக்கின்றன. “அருள் மயமான ஆண்டவரே! உனது இரக்கத்தின் கதவை திறந்துவிடு. இந்த காயங்களின் வழியே உன்னை நாடி என் ஆன்மா பறந்து வருகிறது” - ஷேக்ஸ்பியர். ●



## 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” -யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 02-04-2019 செவ்வாய்கிழமை அன்று காரைக்கால் தூய தேற்றரவு அன்னை ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு பாடல் திருப்பலி நிறை வேற்றப்படும். அவர்களது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டு கிறோம்.

**Mr.R.JOHN DORAI,** AMIE
(Retd.Electrical Engineer, Arooran Sugar Factory,Vadapathimangalam, Tanjore - Dt.)

**தோற்றம் : 06-06-1926**
**மறைவு : 04-03-2019**

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

4,Rose Nagar,Karaikal,
Mobile: 9487241815

## எதை தேர்ந்தெடுப்பது?

– G. *பொனிபாஸ் ஜூலியன்*, புதுவை–9.



எனக்குத் தெரிந்த டெய்லர் ஒருவர் இருந்தார். அவர் தையற் கலையில் சிறப்புமிக்கவர். தொழிலில் மட்டுமல்ல, பொது அறிவிலும் ஆற்றல் படைத்தவர். தையற்கலை என்று சொல்லும்போது, ஏறத் தாழ அறுபத்து நான்கு ஆயகலைகள் இருப்பதாக கூறப்படுகிறது. அவைகளில் முப்பத்து இரண்டு கலைகள் சிறந்ததாக கருதப் படுகிறது. அவைகளில் ஒன்றுதான் தையல்கலை. ஒரு மனிதனை கணிப்பதும், மதிப்பீடு செய்வதிலும், ஆடைக்கு சிறந்த பங்குண்டு. அதனால்தான் ஆள்பாதி, ஆடை பாதி என்று கூறுவார்கள். இந்த கலைக்கு மிக முக்கியமானது தையல் மிஷின். ஏழத்தாழ 188 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1830 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த “**தின் மானியர்**” என்பவரால் தையல்மிஷின் உருவாக்கப்பட்டது. அதிலிருந்து முதன்முதலில் ஒரு ஆடையை தைத்து பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி உடலில் அணிந்துகொண்டு பாரிஸ் நகர் வழியாக வலம் வந்ததை ஓர் கவிஞன் அவளைப் பார்த்து தையலே என்றனாம். தையல் என்ற சொல் அந்தப் பெண்ணைக் குறிப்பிடுவதாக ஏதோ சந்தர்பத்தில் படித்த ஞாபகம் வந்தது.

மேலே சொன்ன இந்த சிறப்பான கலையை இந்த டெய்லர் ஆற்றி வந்தார். இவருக்கு எட்டு வயதில் ஒரு மகன். தந்தை கடைக்கு செல்லும்போது விடுமுறை நாட்களில் அவனும் கடைக்குச் சென்று தந்தையினுடைய வேலையை கவனித்துக் கொண்டு வந்தான். இந்த டெய்லர் அதிகம் பயன்படுத்துவது ஊசியும், கத்தரிக்கோலும். ஆனால் அதை கையாளும் விதமே ஒரு அலாதி. ஊசியை தைத்து முடித்த பின் தன் சட்டைத் துணியில் பத்திரமாக குத்திக் கொள்வார். ஆனால் கத்தரிக்கோலையோ சத்தம் செய்யும் விதமாக பக்கத்தில் வீசிவிடுவார். இந்தச் செயல் அவருடைய மகனுக்கு ஒரு விந்தையாக தென்பட்டது. பத்து பைசா ஊசிக்கு இவ்வளவு மதிப்பா! அதிக விலை கொண்ட கத்திரிக்கோலை வீசி விடுகிறாரே தந்தை என்று எண்ணி தந்தையிடமே இந்த விளக்கத்தை கேட்டுக் கொண்டான். எதற்காக நீங்கள் ஊசிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள், அதே சமயம் விலை உயர்ந்த கத்தரிக்கோலுக்கு கொடுக்கப்பட வில்லையே என்றான். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல இவர் சிறந்த டெய்லர் மட்டுமல்ல பொது அறிவும் உடையவர். அதை நிரூபிக்கும் வகையில் அவருடைய பதில் அமைந்திருந்தது. தந்தை கூறினார் ஊசிக்கு மற்றவரை அரவணைத்து செல்லும் பண்புடையது, எந்த விருப்பும், வெறுப்பும் இல்லாமல் மற்றவருடன் இணைந்து செயல்படும். அதற்கு பிரிக்கும் தன்மை கிடையாது. ஆனால் கத்தரிக் கோலுக்கோ வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற பண்புடையது. இப்போது பையனை பார்த்து கேட்டார். உனக்கு எந்த பண்பு வேண்டும். அனைவரையும் அரவணைத்து செல்லும் பண்பு வேண்டுமா அல்லது பிளவுபடுத்தும் பண்பு வேண்டுமா. மகன் தந்தை யினுடைய பிள்ளை அல்லவா நான் ஊசியைப்போல் செயல்பட விரும்புகிறேன் என்றான்.

இந்த ஒரு சிறிய உதாரணம் நம்மை சிந்திக்க வைக்க தூண்டு கிறது. இந்த சமூகத்தில் வாழுகின்ற நாம் அனைவரோடும் ஒருங் கிணைந்து ஒற்றுமையாக செயல்பட வேண்டும். தேவையில்லாமல் மற்றவரை பகைத்துக் கொள்ளக்கூடாது. குறிப்பாக பெற்றோர் தங்களுடைய பெண்ணை புகுந்த வீட்டிற்கு அனுப்பும் போது ஊசியை கொடுத்து அனுப்ப வேண்டும். கத்தரிக்கோலை அல்ல. ஒரு சில பெற்றோர் நல்ல அறிவுரைகளை கூறாமல் கணவன் வீடு சென்றவுடன், தனி குடுத்தனத்திற்கு ஏற்பாடு செய். தனிக்குடுத்தினம் செய்வது தவறில்லை. மாமனார், மாமியார் அவர்கள் சம்மதத்துடனும் அவர்களுக்கு நல் வருவாய் இருந்தால் இந்த முடிவை மேற்கொள்ளலாம். இவைகள் இல்லாத பட்சத்தில் பாசத்தோடு வளர்த்த முதியோரை நடு வீதியில் நிறுத்திவிட்டு செல்வது நல்ல மகனுக்கும், மருமகளுக்கும் அழகல்ல. இதை சிந்தித்து செயல்பட இறையனுடைய அருளை வேண்டுவோம். ●

அமைதியினால் (சமாதானத்தினால்) நீ எதையும் இழப்பதில்லை. சண்டையினால் நீ எல்லாவற்றையும் இழக்க முடியும்.-திருத்தந்தை 12ம் பத்திநாதர்



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 21-ஆம் படலம்

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி "கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு" என்றார்.

காப்பியப் பாடல் 1084

47 **வெட்டுக்கிளிகளால் வந்த வாதையின் கொடுமையிலிருந்து விடுபட முடியாத மன்னன் பார்வோன், தன் பிழையை உணர்ந்து மனம் மாறியவனாய் மோசேயிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டவாறு, "மோசேயும் பார்வோனிடமிருந்து அகன்று ஆண்டவரிடம் மன்றாடினார்" - விப.10:18.**

'எல்லாம் வல்லவர் யாவே கடவுள்
செல்லா தவரிடம் தன்கை வரிசை'
என்பதைச் சரியாய்ப் புரிந்தே பார்வோன்,
தன்னிடம் அவர்களை விரும்பியே அழைத்துப்
பேசிய பேச்சைக் கேட்ட சோதரர்,
மாசில தாகவே உறுதியாய் நம்பி
ஏற்றுக் கொண்டனர்; எனவே அவர்களும்
மாற்றம் இன்றியே ஆர்வப் பெருக்குடன்
அரண்மனை விட்டு அகன்றே சென்று
இரந்திறை வேண்டினர், எகிப்தில் இருந்து
வெட்டுக் கிளிகளின் வாதைகள் யாவையும்
விட்டந் நேரமே அகற்றிடு மாறே!

காப்பியப் பாடல் 1085

48 **மோசே வேண்டியவாறே "ஆண்டவரும் மிக வலுவான மேல்காற்று வீசச் செய்தார். அது வெட்டுக்கிளிகளை வாரிக்கொண்டு அவற்றைச் செங்கடலில் வீசி எறிந்தது. வெட்டுக்கிளிகளில் ஒன்றைக்கூட அது எகிப்தின் எல்லைகளுக்குள் விட்டுவைக்கவில்லை" -விப.10:18-19.**

வேண்டிய மோசே ஆரோன் வேண்டுதல்
ஆண்டவர் கேட்டார்! ஆகட் டுமென்றார்!
படைகளின் படைப்புக் கடவுள் உடனே
மடைதிறந் தாற்போல் மேல்காற் றதனை
விரைந்தெழுந் தாங்கு வீசிடச் செய்தார்!
இரைந்தெழு காற்றோ கடவுள் கட்டளை
சற்றுமே தாழாது கேட்டதி வேகமாய்,
முற்றுகை யிட்டே கூட்டங் கூட்டமாய்
இருந்ததம் பண்ணிய வெட்டுக் கிளிகளை (இருந்து அதம்)
ஒருநொடிப் பொழுதில் அள்ளி அள்ளியே,
செங்கடல் பரப்பில் வீசி எறிந்ததே!
அங்கொரு வெட்டுக் கிளியென் றெதுவும்
எகிப்தின் எல்லையில் இல்லா தொழிந்ததே!
அகிலத் திலின்றதும் வியப்பாய் நின்றதே!

காப்பியப் பாடல் 1086

49 **ஆண்டவர் ஏவிய எட்டாம் வாதையால் எகிப்தியரின் பயிர்த்தொழில் வருவாய் முற்றிலும் பாழ்படவே மக்கள் உண்ணும் உணவுக்கு வழியின்றி பசிக் கொடுமைக்கு ஆட்பட்டுப் பதறித் தவித்தனர்; எகிப்தில் பஞ்சம் தலைவிரித்தாடியது.**

உண்ணும் உணவுக்(கு) உரிய பயிரெலாம்
மண்ணும் புழுதியும் ஆகிப் போனதால்
மக்களோ பசியால் மனம்ஒடிந் தார்கள்!
முக்கலும் முணகலும் வயிற்றுக் கொடுமையால்
கேட்டன நாட்டின் எட்டுத் திசையிலும்!
வாட்டிய பெருந்துயர் வாதையால் பார்வோன்
விம்மினான்! வெதும்பினான்! யாவேய்க் கெதிராய்
இம்மியும் எதுவும் செய்திட அவன்தன்
தெய்வங் களெல்லாம் செயலற் றிருந்ததால்,
மெய்யும் உயிரும் நடுநடுக் குற்றே
அவல நிலைக்கு ஆட்பட் டுழன்று,
சவம்போல் ஆயினன் மன்னன் பார்வோன்!
இதுவரை வந்த வாதைகள் வரிசையில்
எதுவுமே இதைப்போல் தாக்கவும் இலையே!

தொடரும்..



# கல்வாரித் திருப்பயணி

- வெட்டிவயல் வளவன்.



♦ திருச் சட்டத்தைப் பெரிதாய் எண்ணி
ஆதிக்க வெறியர் (கூ) கொட்டத்தை
அடக்கப் பிறந்த
**கால்வாரிகள் மத்தியில்**
**கல்வாரித் திருப் பயணி!**

♦ மோதும் க (மு) ருத்தப்பர்களால்
சலனப் பட்ட மனத்தான்.
"நீர் ராஜா தானே" கேட்டான்
காரணம் -
யூதர்களின் இராஜா எங்கே
பிறந்துள்ளார்?
இடம் அறிந்திடக் கேட்டனர்
வான் சாஸ்திரிகள்!
கேட்டசெய்தியால் கலங்கினான்
ஏரோது -
அந்தநாள் ஞாபகம் எழவே
சொன்னான் பிலாத்து!
மறந்து - இல்லை இல்லை
மனம் திறந்து "நீர் யூதர்களின்
இராஜா" தானே -

♦ மானுடத்தை
பாவத்தில் இருந்து மீட்க
சுயநல தேசத்தில்
மனிதத்தை அடிக்கல் இட்டதால்
சிலுவையில் உயிர்ந்தார்
"யூதரின் ராஜா" - அதனால்
**ஏரோது கலங்கினான்**
**போஞ்சுப் பிலாத்து**
**க (ந) ழுவினான்!!**

♦ இன்று பழசாய்ப் போன பூமி
சில நேரம்
மயானபூமி - பாலஸ்தீனம் மண்
குண்டுமழை -
புலம்பெயர்தல் - அடுத்தவர் மண்ணில்
கருப்புப் பூமி - கலக்கப்பூமி
**கர்த்தரையே - யோசேப்பையே**
**கலங்கடித்த பூமி - அந்த**
வெள்ளைப் பூமி - இரத்தம்
சிந்திய பூமி -
சிலுவை சாவால் சொல்லும்பூமி
பாலைவனபூமி - பலர்க்கு
சுற்றுலாப் பூமி -
கேட்பவர்க்குதினம்
அருவருப்பான பூமி - உலகில்

**கலக்கத்தால் பிறந்த**
**பூமி**
**கலகத்தால் உலகிற்கு**
**நீதி பிறந்த பூமி!**

♦ எந்நாளும்
தாவீதின் வேரின்
சிலுவையின் பெருமை
இருக்கும்
கிறித்துவின் மதிப்பீடுக்கள்
பெருக்கும்!

♦ வார்த்தை ஜாலங்களிலும்
வாக்குப் போரிலும்
வாழ்க்கை முறையில் (ஏ)
மாற்றும்
சிந்தாந்திகள் மத்தியில்
நடித்துக் காட்டியவர்
அல்லவே நீர்.
நடத்திக் காட்டியவர்

♦ நற்செய்தியின் மூலவரே!
யு டியூப்பில், பேஸ் புக்கில்
- வாட்ஸ் ஆப்பில்,
முகநூலிலும் - உம்மை
தினமும் சிலுவையில்
அறைகிறார்கள்

"இன்னதென்று அறிகிலார்
மன்னியும் தந்தாய்" என்று
சொல்லியே சமாதான
பிரபுவே! உம்
வருகைக்காய்
காத்துள்ளோம்!
சிலுவை நாதா!
எங்களால் உம்மை வாழ்த்
தத்தான் முடியும்!
எதிர்த்துப் போரிட உம்
இராஜ்ஜியம் வருக. ●


## மணமகள் தேவை

MBBS, MD முடித்துள்ள வயது 29, உயரம் 6.1 உள்ள மணமகனுக்கு மருத்துவம் சார்ந்த பிரிவுகளில் MBBS, MDS or MSC Nursing முடித்த மணமகள் தேவை.

பாண்டி.

Contact No: 97876 92132,

# தவக்காலச் சிந்தனைகள்!

தந்தை ஜெயபாலன்

❖ தனிமையில் இறைவேண்டலோடு கூடிய நோன்பிருந்து
தனி நோன்பினால் எஞ்சியதை இல்லாதோருக்கு வழங்கி
தனிமுதல் இறைவனிடமிருந்து கைமாறு தேடும் காலமே!
— தவக்காலம்!

❖ இறை அன்பைத்தேடி அவரது இரக்கத்தால் வருந்தி
இனிய மன்னிப்பையும் பெற்று இம்மை வாழ்வில்
இனியவராய் வாழ்ந்து நிலைவாழ்வுக்குத் தகுதிபெறச் செய்யும்
காலமே! — தவக்காலம்!

❖ உற்றார் உறவினரோடு உறவை வளர்த்து -முறிந்திருக்கும் இறை
உறவை சரிசெய்து புனிதரோடும் ஒன்றிப்பில் உயர்ந்து
உயிர்ப்பு வாழ்வை உரிதாக்க உதவும் காலமே! — தவக்காலம்!

❖ நடை பயணம், திருப்பயணம் என பல கோவில்களுக்குச்
சென்றாலும்
நம் வீட்டார், ஊராருடன் அதனால் நல் உறவில் நாம் வளராவிடில்
நாம் மேற்கொள்ளும் இத்தவச் செயல்களால் நமக்கென்ன பயன்?!

❖ ‘சிலுவைப் பாதை’, ஒருசந்தி போன்ற பக்தி முயற்சிகள்
செய்தாலும் - இயேசுவின்
சீடனுக்குரிய அன்புப் பாதையில் நாம் வாழாவிடில்
சிலுவையின் பயனால் விளைந்த உயிர்ப்பு வாழ்வு
நமக்குரியதாகுமா?

❖ ‘ஓசான்னா’ எனப்பாடி நாம் உயர்த்திப் பிடித்த ஓலைகள்தான்
ஒன்றாய்ச் சேர்த்து எரிக்கப்பட்டு சாம்பலாக — நம்
ஒவ்வொருவர் நெற்றியிலும் பூசப்பட்டது — அதுபோல

❖ வரும் புனித வாரத்திலும் மறுபடியும் அதேபோல — அடுத்து
வரும் விபூதிப் புதனுக்காகத்தான் குருத்தோலை
வாங்கி ஓசன்னா பாடிப் பவனி வரப் போகிறோமா?

❖ பாஸ்கா விழா கொண்டாட்டத்தில் திருமுழுக்கின் உறுதிகளை
பக்தியோடு புதுப்பிக்கப் போகிற நாம்-அதன் பின்
பழைய வாழ்வுதான் வாழப் போகிறோமா என நம்மையே
கேட்போம்!

புதுவாழ்வு வாழ உறுதி எடுப்பதே தவக்காலத்தின்
நோக்கமாகட்டும்!

சென்ற இதழ் தொடர்ச்சி..

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-180

### ஆகஸ்டு மாத போட்டியின் முடிவுகள்

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** S.பால்ராஜ், சாரா சிலாஸ், A. விக்டோரியா அமல்ராஜ் — மேட்டுப்பாளையம், C. கஸ்பார் Rtd.H.M.— இளையாங்கண்ணி, Sr. மரியபுஷ்பம் — மயிலாடுதுறை, Sr. லாரன்ஸ் செல்வநாதன், Sr. செலீன் இராயப்பன்–திண்டிவனம், ரோசாலி நீதிதாஸ்–நெடுங்காடு, Sr. மெல்கியூர், Sr. அலோசியா–R.S.புரம், Sr. செசீலி–வாலகிரி, M.மதலை இருதயமேரி, M.மோட்சமேரி Rtd.Tr, S.செல்வி எமல்டாமேரி–சேலம் கேம்ப், D. ரோஸ்மேரி — அழகப்ப சமுத்திரம். A. செல்வராயன் சாந்தா, S. சவரிமுத்து Rtd.M.T.–சாத்திப்பட்டு, பல்தசார் அந்தோணிசாமி, மேரி பல்தசார்–ஜெயங்கொண்டம், லில்லி அந்தோணிராஜ் — K.G.வலசு, S. அப்போலினியஸ்–தக்கலை டெய்சி அமல்ராஜ்–அமிந்தகரை G. லூர்துமேரி–வாழப்பாடி, M. லீமாமேரி ஜோஸ்பீன்–வக்கம்பட்டி, C. பவுலீன் சூசைநாதன் Tr — மதுராந்தகம், Sr. அமலோற்பவமேரி நிர்மலா — எறையூர், ஷீலா விக்டர், A. எட்வர்டு மரிஜோஸ் ஆனந்த், S. ஆனி சுசான்சாந்தி–புதுவை, P.மரிய சகாய செபஸ்டின்–போளூர், J.மிக்கேலம்மாள் ஜேசுமணி–K.கைலாசபுரம், S. அருள்ராஜ்–மடிப்பாக்கம், A. சில்வியா அனித்தா — பாளையங்கோட்டை, Dr.A.வில்லியம் ராபட்ஸன், டாரிஸ் வில்லியம்–கோட்டுச்சேரி, D. பேபி அடைக்கலமேரி–திருமயம், K. சந்தோஷராணி–பெரம்பலூர், Sr. மௌரீன்மேரி–தொண்டமானத்தம், Sr.மேரி லிடியா–அழகாபுரம். C. மேரி ஜோஸ்–பெரியகொடிவேரி, Sr. மேரி எம்மா — கும்பகோணம், Sr. எலிசாமேரி — காளையாந்தோப்பு, Sr.ஜோவித்தாமேரி–புதுப்பாளையம், Sr.L.ரெஜினாமேரி–புறத்தாக்குடி, P.விஜயக்குமார் — லாஸ் பேட்டை, J.D.ஜான்சிமேரி — குளத்துப்பாளையம், Sr. ரீத்தா ஜோஸ்பீன்–தென்கரைக் கோட்டை, A.அலோசியஸ்–K.K.நகர், M.சின்னப்பன் Rtd.J.E. — உழவர்கரை விவியான் இருதயராஜ் –பெரும்பண்ணையூர், J.செல்வ ராணி, L.ரோஸ்மேரி, A. ஸ்டெல்லாமேரி, J.சூசைமேரி, A. ரெஜினா–தஞ்சாவூர், M.தாரிஸ் ரோச், A. டிவைன் ரொசாரியோ–அக்கரைக் கொடிவேரி, G.மேரி பிலோமினா–D.G.புதூர், C. குப்புச்சவரி Rtd.H.M–V.பாஞ்சாலம், V.D ரெஜினா மேரி– போத்தனூர், G.அந்தோணிரோஸ்–சத்தியமங்கலம், A. ரோஸ்மேரி –வீரக்குறிச்சி. M.லீமா இராபர்ட்–பொள்ளாச்சி, புஷ்பா ரவி, G.மகிமைதாஸ்–மார்ட்டள்ளி, R. சாந்தி ஜாய்ஸ் Tr–மங்கலம், R.S.இரபேல்–சவேரியார்சமுத்திரம், A. ஜோசப்–பெங்களூர், A. ஆனி பிரபா, M.ஜூலியட்மேரி, A. சகாய எல்ஸி, A. அன்னம்மாள்–அழகப்பபுரம், B. லில்லிமேரி–வில்லியனூர், S. பெர்க்மான்ஸ் மேரி Tr, A. விக்டர் எஸ்தர் Tr, S. பிலோமினா Rtd.Tr–மங்கலம்பேட்டை, பதில் எழுதி பெயர் தெரிவிக்காதவர்கள் 7 பேர்.

ஆகஸ்ட் மாத பரிசு உதவி: A. மரியரோஸ்லீன் Rtd.H.M. புனித அந்தோணியார் வீதி, 736, நங்காத்தூர்–PO, விழுப்புரம் மாவட்டம்.
மாதரஸி ஜோசப்–உப்பளம்.

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-181

### செப்டம்பர் மாத சிறப்புப் போட்டியின் முடிவுகள்

**விவிலிய பகுதி: நீதிமொழி, சபை திருமுகங்கள்**

**சரியான பதில்கள்:**

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 1. கற்பிப்பதை | நீதி.1:8 |
| 6. விலைமகளைப் | நீதி.5:20 |
| 7. நீங்கு | நீதி.31:12 |
| 8. அடங்கி | சபை.8:2 |
| 9. வலிமை | சபை.6:10 |
| 13.குவியும் | நீதி.11:16 |
| 19. பெருமை | நீதி.20:29 |
| 22. இனிய | நீதி. 25:15 |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. கடலை | சபை.1:7 |
| 2. செல்வம் | சபை.2:9 |
| 3. பற்றிக் கொள் | நீதி 3:21 |
| 4. விலைக்கு | சபை 2:7 |
| 9. வந்தேன் | சபை 5:18 |
| 11. வாக்கு | சபை. 5:2 |
| 10. விளைவது | நீதி.15:6 |
| 15. கொண்டே | நீதி.28:2 |
| 21. ஏழ்மை | நீதி.24:34 |

**வலமிருந்து இடம்**

| | |
|---|---|
| 1. கடவுளோடு | நீதி.2:17 |
| 5. கண்டேன் | சபை.3:16 |
| 6. விட்டு | நீதி.14:16 |
| 11. வாழ்க்கை | சபை.12:1 |
| 14. வஞ்சக | நீதி.17:20 |
| 16. துகளை | நீதி.8:26 |
| 17. மனம் | நீதி.16:23 |
| 18. கருணை | நீதி.18.5 |
| 20. மொழிகள் | நீதி.30:1 |
| 21.ஏழையோர் | நீதி.28:11 |

**கீழிருந்து மேல்**

| | |
|---|---|
| 2. செல்வத்தை | நீதி.3:9 |
| 4. விட்டு | நீதி.4:15 |
| 5. கண்கள் | சபை.2:14 |
| 8. அணிந்து | நீதி.6:21 |
| 11. வாய்மொழி | சபை 10:12 |
| 12. வலிமை | சபை 7:19 |

தொடரும்..



**க. மேரி (எ) லூர்துமேரி**

**தோற்றம் : 01-12-1940**
**மறைவு : 23-03-2009**

## விண்ணக வாழ்வின்
## 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்- யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக 23.3.2019 சனிக் கிழமை காலை 6.45 மணிக்கு நறுமணம், புனித அந்தோணியார் ஆலயத்தில் திருப்பலி நிறை வேற்றப்பட்டது. அனைவரும் அன்னாரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.**

பிரிவால் துயருறும்
**கணவர் மற்றும் உறவினர்கள்**
நறுமணம்.



அணிலாடி

**L.அடைக்கலமரிநாதன் M.A.,M.Ed. ஆசிரியர்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24-05-1946 | 02-04-2017 |

## விண்ணக வாழ்வின்
## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"அப்பா!நீங்கள் சுவாசிக்க மறந்தபோதுகூட எங்களை
நேசிக்க மறந்ததில்லையே."

என் தந்தை எங்கே!
என் தெய்வம் எங்கே!
எங்கே நீ போனாயோ!

கானல்நீர் கண்ணில்!
காணும் நீர் கண்ணில்!
காணாமல் போனாயோ!

நான் தேடும் போது!
நீ தோன்றும் போது!
என் இன்பம் தீருமோ!

நான்தேடும் போது
நீ தோன்றா போது!
என் துன்பம் தீருமா!

கண்ணீராய்
கண்ணில் தோன்றும்
கவலை என்றும்
எப்போதும் மாறுமோ!
வா வா வா அப்பா!!... அப்பா!
வா வா வா... வா.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, 2.4.2019 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு, செஞ்சி, புனித மிக்கேல் ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**

---

## விண்ணக வாழ்வின் 3 ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு.லக்ருவா ஜெயசீலன்**

Mr. LACROIX Djeassilane

**தோற்றம் : 05-09-1929**

**மறைவு : 21-03-2016**

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் – யோவான்.11:25

**ஜெபம்**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆத்துமங்களை இரட்சிக்கிறவரே! உமது அன்பில் மூழ்கி இளைப்பாறுவதற்காக இப்பூவுலகினின்று உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட உம் அடியார் திரு. **லக்ருவா ஜெயசீலன்** அவர்களின் ஆன்மா என்றென்றும் விண்ணகப் பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில் முடிவில்லா வாழ்வில் சேர்ந்து மகிழ உம்மை மன்றாடுகிறோம். ஆமென் - பர.மங்.திரி.

பிரிவால் வாடும்
**மனைவி**
**மகன்கள் - மருமகள்கள்**
**மகள்கள் - மருமகன்கள்**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**
நெல்லித்தோப்பு.

**திருப்பலி:** 21-03-2019 வியாழக் கிழமை காலை 6.00 நெல்லித்தோப்பு, தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் ஆத்தும இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

---

## விண்ணக வாழ்வின்
## 33-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 01-09-1922



இறப்பு: 04-04-1986

**ஆன்ரியேத் தங்கம்மாள் செல்வராஜு**

Henriette Thangammal Selvaradjou (Née Sandjivy)

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லா விண்ணக வாழ்வையும் அளித்தருளும். *-கர்.மங்.திரி.*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-4-2019 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு, புதுவை ஜென்மராக்கினி மாதா பேராலயத்தில் பாடல் திருப்பலி நிறை வேற்றப்படும். திருப்பலியில் பங்குகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் மீளா துயருறும்
மகன்கள், மகள்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

"மரணத்தால் விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

**விண்ணக வாழ்வின்**
**4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**



**திருமதி.A. எமிலி (எ) லூர்துமேரி**

**தோற்றம்:** 30-06-1959
**மறைவு:** 19-01-2015

**விண்ணக வாழ்வின்**
**11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**



**திரு.A. அந்தோணி ஜான் பிரிட்டோ**

**தோற்றம்:** 31-08-1981
**மறைவு:** 29-03-2009

**ஜெபம்**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆன்மாக்களை இரட்சிக்கின்றவரே! உமது கட்டளைப்படி வாழ்ந்த இவர்களின் ஆன்மாக்களை உமது அருளால் மன்னித்து ஏற்று, விண்ணக பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில் முடிவில்லா வாழ்வில் என்றும் திளைத்திருக்கும் பேற்றை இவர்களுக்கு அருள்வீராக. - ஆமென். *– கர்.மங்.திரி.*

**பிரிவால் வாடும்**
**P. அலெக்சாண்டர்,**
**மற்றும் குடும்பத்தினர், உறவினர்கள்.**
அரசகுழி.

*இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 29-03-2019 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு அரசகுழி, புனித உத்தரிய அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.*

---



**திரு. S. குழந்தைசாமி** HM.Rtd.
St.Ann's Middle School, Tindivanam.

**தோற்றம்:** 16-12-1936
**மறைவு:** 06-04-2010

## விண்ணக வாழ்வின்
## ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**"நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி அவர்கள்மேல் ஒளிர்வதாக"**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-04-2019 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை வினோபா நகர், புனித சூசையப்பர் ஆலயத்திலும், மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.**

*நினைவில் வாழும்*
**மகள், மகன்கள்,**
**மருமகன், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

ஞானப்பிரகாசம் நகர், புதுச்சேரி - 8

## 48-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 26-11-1915



இறப்பு: 16-6-1971

Mr. DEROCK Joseph Louis André

S/o. DEROCK Mariassoucé

## 15-ஆம் வருட நினைவு அஞ்சலி

பிறப்பு: 20-6-1928



இறப்பு: 04-04-2004

Mrs. DEROCK MARY THERESA

W/o. DEROCK Joseph Louis André

## செபம்

இறைவா, எங்கள் குடும்பத்தின் தூண்களாய் திகழ்ந்து, அன்பின் வடிவாய் எங்களை பேணிக்காக்க பல தியாகங்களை செய்து, வாழ்க்கையின் முன்னேற்ற படிகளில் எங்களை ஏற்றிவிட்டு, உமது முடிவில்லா ஆட்சியில் சமாதானத்தில் இளைப்பாற, உம்முடைய வான்வீட்டிற்கு உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்கள் திரு. **DEROCK Joseph Louis André** திருமதி. **DEROCK Mary Thérèsa** அவர்களிருவரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளிக்க மன்றாடுகிறோம், ஆமென்.

**CHERS PARENTS - NOUS VOUS AIMONS TRES FORTS-LES ENFANTS**

4-4-2019 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு, புதுச்சேரி புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும், காலை 6 மணிக்கு நெல்லித்தோப்பு, விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 5.30 மணிக்கு திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு, ரெட்டியார்பாளையம் புனித அந்திரேயா ஆலயத்திலும், நிறைவேற்றப்படும் திருப்பலிகளில் கலந்துகொண்டு, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள்,**

**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,**

**மற்றும் குடும்பத்தினர்.**

20, III Cross, Ratna Nagar, Puducherry - 9. Phone: 220 20 97/ Cell: 95 00 95 19 72

**ஈராக்கில் படகு விபத்தில் பலியானவர்களுக்கு திருத்தந்தை செபம்:** ஈராக் நாட்டின் வடக்கில், மொசூல் நகருக்கு அருகில், டைகிரிஸ் நதியில் இடம்பெற்ற படகு விபத்து, தனக்கு மிகுந்த கவலையை அளித்துள்ளது எனவும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஒருமைப் பாட்டுணர்வைத் தெரிவிப்பதாகவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். மார்ச் 21, இவ்வியாழனன்று Nowruz எனப்படும் பாரசீக புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்த இந்த மக்கள் பயணம் மேற்கொண்ட படகு கவிழ்ந்ததில், பெண்கள், சிறார் உட்பட குறைந்தது 94 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் இறந்தவர்கள், இறைவனின் நிறைசாந்தியைப் பெறவும், மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்காகவும், ஈராக் நாட்டினர் அனைவரும் ஆறுதலும் சக்தியும் பெறவும் தான் செபிப்பதாகவும் திருத்தந்தை கூறியுள்ளார். திருத் தந்தையின் ஆறுதலும் செபமும் நிறைந்த தந்திச் செய்தியை, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் அனுப்பியுள்ளார். படகுப் பயணத்தின் போது நதியில் ஏற்பட்ட நீர்சுழற்சியில் படகு கவிழ்ந்தது என்றும், நீச்சல் தெரியாத பலர் இறந்தனர் என்றும் கூறப்படுகின்றது. மேலும், ஆப்ரிக்காவில் இடாய் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மொசாம்பிக், ஜிம்பாபுவே மற்றும் மலாவி நாடுகளின் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கென, முதல் கட்ட உதவியாக, ஒவ்வொரு நாட்டிற்கும் ஐம்பதாயிரம் யூரோக்களை, திருத்தந்தையின் பெயரால் அனுப்பியுள்ளது. ஒருங் கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை. - வத்.செய்தி.

**கிறிஸ்து வாழ்கிறார், அவரே நம் நம்பிக்கை-திருத்தூது அறிவுரை:** மார்ச் 25, வருகிற திங்களன்று இத்தாலியின் லொரெத்தோ அன்னை மரியா திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோர் பற்றிய உலக ஆயர் மாமன்றத்தின் தீர்மானங்கள் அடங்கிய, "**கிறிஸ்து வாழ்கிறார், அவரே நம் நம்பிக்கை** (Vive Cristo, experanza nuestra)" **எனப்படும் திருத்தூது அறிவுரை ஏட்டில்** கையெழுத்திடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்பானிய மொழியில் எழுதப்பட்டுள்ள இந்த அறிவுரை ஏடு, இளையோர்க்கு எழுதும் ஒரு கடிதம் போன்று அமைந்துள்ளது என்றும், "கிறிஸ்து வாழ்கிறார், அவரே நம் நம்பிக்கை" என்ற பொருள்கொண்ட இஸ்பானிய வார்த்தைகளால், இதன் முதல் வரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. நம் ஆண்டவரின் பிறப்பு, அன்னை மரியாவுக்கு அறிவிக்கப் பட்டதை நினைவு கூரும் திருவிழாவன்று, திருத்தந்தை இந்த ஏட்டில் கையெழுத்திடுவது, இந்த ஏட்டை அன்னை மரியாவுக்கு முழுவதும் அர்ப்பணிப்பதன் அடையாளமாக உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 25 தேதி, திருத்தந்தை கையெழுத்திட்டவுடன், அன்றே திருப்பீட செய்தியாளர் சந்திப்பில் இந்த ஏடு வெளியிடப்படும். கடந்த ஆண்டு அக்டோபர் 3ம் தேதி முதல் 28ம் தேதி முடிய, இளையோர், விசுவாசம் மற்றும் அழைப்பு என்ற தலைப்பில், உலக ஆயர்கள் மாமன்றம் வத்திக்கானில் நடைபெற்றது. - வத்.செய்தி.

**திருத்தந்தை டுவிட்டர் செய்தி:**

"வெறிப்புறத் தோற்றங்கள், பணம், செய்யும் தொழில் மற்றும் பொழுதுபோக்குகள், நம்மை மயக்க வைக்கின்ற எச்சரிக்கைகள்; இவை நம் இலக்கை அடையவிடாமல், திசை திருப்புகின்றன; வீண்பெருமைகளிலிருந்து நம் இதயங்களை விடுவிப்பதற்குத் தேவையான அருளை, தவக்காலம் வழங்குகின்றது."

**குருக்கள் மரியன்னை இயக்கம்**

**(Marian Movement of Priests - MMP)**



அகில உலக குருக்கள் மரியன்னை இயக்கம், அருட்திரு. J.M. **கிரகோரி லூயிஸ் ஜோசப்,** புதுவை-கடலூர் உயர் மறை மாவட்ட பொருளாளர், அவர்களை புதிய இந்திய தேசிய இயக்குநராகவும், Dr. **டேனியல் டிஃபைன்** அவர்களை தேசிய ஒருங்கிணைப்பாளராகவும் நியமித்துள்ளது. இந்த இயக் கத்தின் குறிக்கோள் அன்னை மரியாளின் மாசற்ற இருதயத் தின் வெற்றிக்காக பணியாற்றுவதுதான். மரியே வாழ்க.

தொடர்புக்கு: அருட்திரு. J.M. கிரகோரி
அலைபேசி: 9443214408
Dr. டேனியல் டி.ஃபைன்
அலைபேசி: 9894606745

**லோக்பால் தலைவராக நீதிபதி பினாகி சந்திரகோஷ் நியமனம்:** ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பான லோக்பால்-இன் தலைவராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பினாகி சந்திரகோஷ் செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டார். லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர்களை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேர்வுக் குழு தெரிவு செய்தது. அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். - தினமணி.

**ஹைதி பிரதமர் ராஜினாமா:** கரீபியன் தீவு நாடுகளில் ஒன்றான ஹைதியில், பிரதமர் ஜான்ஹென்றி சியன்ட் - க்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றதையடுத்து, அவர் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். எனினும், புதிய அரசு அமையும் வரை, ஜான் ஹென்றி சியன்ட் மற்றும் அவரது அமைச்சர்கள் தங்கள் பொறுப்புகளில் சில கட்டுப்பாடுகளுடன் தொடர்வார்கள் என்று நாடாளுமன்ற தலைவர் அறிவித்தார்.

**அமெரிக்கா: வாஷிங்டன் மார்ச்.21:** அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணத்தில் உள்ள கொலம்பியா மாவட்ட மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாக இந்திய அமெரிக்க பெண் நியோமி ராவ் (வயது 45) பதவியேற்றார். இத்தகைய பொறுப்புக்கு உயர்த்தப்படும் இரண்டாவது இந்திய அமெரிக்கர் இவர். அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் இந்திய தம்பதிக்கு பிறந்த நியோமி ராவ், அங்குள்ள புகழ்பெற்ற யேல் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றவர். சிறிதுகாலம் சட்டப் பேராசிரியராகப் பணி யாற்றிய இவர், அரசின் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அமெரிக்கா வின் தகவல் மற்றும் ஒழுங்குமுறை துறை நிர்வாகத்தில் சிறப்பாகப் பணியாற்றிதற்காக அதிபர் டிரம்பின் பாராட்டைப் பெற்றார். - தினமணி.

**முகநூல்: சான்பிரான்சிஸ்கோ: அமெரிக்கா, மார்ச்.21:** முகநூல் (.ஃபேஸ்புக்) பயன்படுத்துபவர்களில் லட்சக்கணக் கானோரின் கடவுச் சொல்லுக்கு (பாஸ்வோர்டு) எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பதை அந்த நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. முகநூல் நிறுவனத்தின்சர்வர்கள் எவ்வித பாதுகாப்பும் இன்றி முகநூல் கடவுச் சொற்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனத்தில் பணிபுரியும் எவரும் இந்த கடவுச் சொற்களைத் தெரிந்து கொள்ள முடியும். இது தொடர்பாக முகநூல் நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் பயனாளிகளின் தகவல் சேமிப்புப் பிரிவின் துணைத் தலைவர் பெட்ரோ என்பவர் இதுவரை எந்த பணியாளரும் கடவுச் சொல் உள்ள கணிணிக் கோப்புகளைத் திறந்தது இல்லை என்று மட்டும் கூறியுள்ளார். - தினமணி.

**Published and Printed by** Fr.C.Antoni Roche **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Rev. Fr. C.Antoni Roche.**